UK Health Security Agency




# சூட்டை/ வெப்பத்தை வெல்லுவோம்: வெப்பமான வானிலையில் பாதுகாப்பாக இருத்தல்

வாசிப்புக்கு எளிதான
சிறு புத்தகம்








# வெப்பமான வானிலையைப் பற்றி




**எங்கள் வானிலையானது வெப்பமடைந்து வருகிறது. ஜூலை 2022 இல், எமது வெப்பநிலை முதல் முறையாக 40°C ஐ எட்டியது.**



வெப்பமான வானிலை மக்களை உடல்நிலை சரியில்லாமல் செய்யலாம். இது ஏற்கனவே உள்ள உடல்நலப் பிரச்சினைகளை மேலும் மோசமாக்கலாம்.



மேலும் இது பின்வருவனவற்றை ஏற்படுகிறது:

- வெப்பச் சோர்வு
- வெப்ப அதிர்ச்சி (heatstroke)



தயாராக இருங்கள். தகவலுக்கு செய்திகள் மற்றும் வானிலை முன்னறிவிப்புகளைப் பாருங்கள்.

# சூரிய ஒளியில் இருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்



**நீங்கள் உங்களது உடல் அதிக வெப்பமடைவதைத் தடுப்பது முக்கியம்.**

நீங்கள் செய்யக்கூடிய சில விஷயங்கள் இங்கே:




- காலை 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை நிழலில் இருங்கள்.



- தளர்வான ஆடைகள், அகலமான விளிம்புகள் கொண்ட தொப்பி மற்றும் சன்கிளாஸ்கள் அணியுங்கள்.

- நிறைய தண்ணீர் குடிக்கவும். அதிகமாக மது அருந்த வேண்டாம்.




- நிறைய சன்ஸ்கிரீன் பயன்படுத்தவும்

சன்ஸ்கிரீன் பாட்டில் **30+ UPF**என்று சொல்வதை உறுதி செய்யவும். UPF 30 ஐ விட பெரிய எண் எனில் இன்னும் சிறந்தது.

# குளிர்விப்பது எப்படி



**உங்கள் உடல் மிகவும் சூடாக இருந்தால், குளிர்விக்க நீங்கள் செய்யக்கூடிய விஷயங்கள் சில உள்ளன:**

- நீங்கள் குளிர்ச்சியான இடத்திற்கு செல்லவும்

- ஜாக்கெட் அல்லது சாக்ஸ் போன்ற கூடுதல் ஆடைகளை கழற்றவும்.



- குளிர் பானங்கள் குடிக்கவும் அல்லது ஐஸ் லாலிகளை சாப்பிடவும்

- உங்கள் தோலில் குளிர்ந்த நீரைத் தெளிக்கவும்.



- உங்கள் கைகளுக்குக் கீழே அல்லது கழுத்தின் பின்புறத்தில் ஒரு குளிர் பொதியை (cold pack) வைக்கவும்

- சூரியனை எதிர்கொள்ளும் ஜன்னல்கள் அல்லது திரைச்சீலைகளை மூடவும்

# ஆபத்தில் உள்ளவர்கள்



**வெப்பமான வானிலை காரணமாக சிலர் மற்றவர்களை விடவும் நோய்வாய்ப் படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.**

அவர்கள் யாரெனில்



- 65 வயதிற்கு மேல் இருப்பவர்கள்
- 5 வயது அல்லது அதற்குக் குறைவானவர்கள்
- நீண்டகால சுகாதார சிக்கல்கள் உள்ளவர்கள்



- தனியாக வாழ்கிறவர்கள், வீடற்றவர்கள், அல்லது தங்களைக் கவனித்துக் கொள்ள உதவி தேவைப்படுகிறார்கள்.
- டிமென்ஷியா, மனநலப் பிரச்சினைகள், போதைப்பொருள் அல்லது மதுவுக்கு அடிமையாதல் போன்ற பாதிப்புகள் இருந்தால்



- நாளின் வெப்பமான நேரத்தில் வீட்டில் இருப்பவர்கள்.

# வெப்பச் சோர்வு (Heat exhaustion )



**உடல் அதிக வெப்பமடைவதை வெப்பச் சோர்வு என்று அழைக்கப்படுகிறது. இது பொதுவாக அவசரநிலை அல்ல.**

**வெப்ப சோர்வின் அறிகுறிகள்**

- சோர்வு, பலவீனம் அல்லது மயக்க உணர்வு



- தலைவலி
- தசைப்பிடிப்புக்கள்
- உடல்நிலை சரியில்லாமல் இருப்பது அல்லது அதுபோல் உணர்தல்



- கடுமையான வியர்வை
- கடுமையான தாகம்

**உங்களால் முடிந்தவரை சீக்கிரம் வெப்பத்தைக் குறையுங்கள்**
பக்கம் 4 இல் உள்ள உதவிக்குறிப்புகளைப் பின்பற்றவும்.



நீங்கள் உங்களது உடல் வெப்பத்தைக் குறைக்கவில்லை என்றால், வெப்பச் சோர்வு வெப்ப அதிர்ச்சியாக ( heatstroke) மாறக்கூடும்.

# வெப்ப அதிர்ச்சி (heatstroke)




**உடல் குளிர்விக்கப்பட முடியாதபோது வெப்ப அதிர்ச்சி (heatstroke) ஏற்படுகிறது. இது மிகவும் ஆபத்தானதாக இருக்கலாம்.**

**வெப்ப அதிர்ச்சி (heatstroke) யின் அறிகுறிகள்**



- குழப்பநிலை
- ஒருங்கிணைப்பு இல்லாமை, எடுத்துக்காட்டாக, நடப்பது அல்லது பொருட்களை எடுப்பது கடினமாக இருத்தல்
- வேகமான இதய துடிப்பு அல்லது சுவாசம்
- சூடான தோல், ஆனால் வியர்வை இல்லை
- வலிப்புத்தாக்கங்கள்



**இது ஒரு அவசரநிலை!**






**999க்கு அழையுங்கள்!**
பின்னர், அந்த நபரை வெப்பதைக் குறைத்து குளிர்மைப்படுத்த முயற்சிக்கவும்.

# நீந்தும்போது பாதுகாப்பாக இருங்கள்



**கடல், ஆறுகள் அல்லது ஏரிகளில் நீந்துவது குளிர்ச்சியாக இருக்க ஒரு நல்ல வழியாகத் தோன்றலாம். ஆனால் அது ஆபத்தாகவும் இருக்கலாம்!**



- எச்சரிக்கை அறிகுறிகளைத் பாருங்கள், மேலும் உயிர்காப்பாளர்கள் இருக்கும் இடத்தில் மட்டுமே நீந்தவும்.
- கடற்கரையிலிருந்து அதிக தூரத்தில்  நீந்த வேண்டாம்.



- ஒருபோதும் மது அருந்திய பிறகு நீந்த வேண்டாம்
- குளிர்ச்சியாக உணர்ந்தவுடன் வெளியே நீரைவிட்டும் செல்லுங்கள் - திறந்த நீர் உங்களுக்கு குளிர்நீர் அதிர்ச்சியைத் தரலாம்.



- படகு சவாரி செய்தாலோ அல்லது மீன்பிடித்தாலோ லைஃப் ஜாக்கெட் அணியுங்கள்.
- எப்போதும் வேறொருவருடன் நீந்தினால் ஒருவருக்கொருவர் உதவ முடியும்.

# உதவி மற்றும் ஆலோசனை
# (Help and advice)




**சுகாதார தகவலுக்கான இணைப்புகள்**

[சூட்டை/ வெப்பத்தை வெல்லுவோம்:]

[வெப்பச் சோர்வு மற்றும் வெப்ப அதிர்ச்சி (Heat exhaustion and heat stroke)]



[சன்ஸ்கிரீன் மற்றும் சூரிய பாதுகாப்பு (Sunscreen and sun safety)]

[உங்கள் குழந்தையை வெயிலில் பாதுகாப்பாக வைத்திருத்தல் (Keeping your baby safe in the sun)]

**மேலும் தகவல் மற்றும் ஆதரவுக்கான இணைப்புகள்**



உள ஆரோக்கியம்: ஒவ்வொரு உள்ளமும் முக்கியமாகும் (Mental health: Every Mind Matters)

நீங்கள் ஒரு நண்பர், அண்டை வீட்டார் அல்லது குடும்ப உறுப்பினரைப் பற்றி கவலைப்பட்டால்: உங்கள் லோக்கல் கவுன்சிலைத் தொடர்பு கொள்ளவும்.

ROYAL LIFE SAVING SOCIETY UK

பாதுகாப்பான நீச்சல்:
ராயல் லைஃப் சேவிங் சொசைட்டி (Royal Life Saving Society)